**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**S.C.No.124/2025**

**வழக்கு சாட்சி P.W.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமச்சந்திரன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பாப்பிநாயக்கர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : புதுக்கோட்டை, சத்திரப்பட்டி | வயது | : சுமார் 65 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 01.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

கடந்த 17.11.2023ம் ஆண்டு காலை 07.00 மணிக்கு தகவல் எனக்கு தெரிந்துவிட்டது. நான் அரை மணி நேரத்தில் எனது வண்டியை எடுத்துக் கொண்டு பெரியகோட்டை பிரிவு அருகே பார்த்த போது எனது மகன் பிரகாஷ் ரோட்டில் படுத்துக்கிடந்தார். அடுத்த 5 நிமிடத்தில் அந்த இடத்திற்கு ஆம்புலன்ஸ் வாகனம் வந்தது. அந்த ஆம்புலன்ஸ் வாகனத்தின் மூலம் ஒட்டன்சத்திரம் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்துவிட்டோம். அடுத்து பார்த்துவிட்டு திண்டுக்கல் மருத்துவமனைக்கு எடுத்து செல்ல வேண்டும் என்று ஒட்டன்சத்திரம் மருத்துவமனையில் கூறிவிட்டதால் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம். அங்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். அதற்கு பிறகு போலீசார் அங்கு வந்தார்கள். எப்படி நடந்தது, என்ன என்று போலீசார் கேட்டார்கள். அவ்வாறு கேட்ட போது எனது மகனால் வாய் பேச முடியாமல் சிவராஜ் என்பவர் 2023ம் வருடம் செட்டிபட்டி பிரிவிற்கு எனது மகனை வரச்சொல்லி பன்றி கறி இருப்பதாகவும், தண்ணீர் இருக்கிறது என்றும் சொல்லி எனது மகனிடம் யாரிடமும் வீட்டில் சொல்லமால் புறப்பட்டு வா என்று சிவராஜ் சொல்லியுள்ளார். அங்கு எனது மகன் சென்றவுடன் சிவராஜ் வண்டியை நிறுத்திவிட்டு எனது மகன் பிரகாஷ் வண்டியில் இருவரும் மக்காச்சோளம்

காட்டிற்குள் சென்றுள்ளார்கள். எனது மகன் கீழே இறங்கியவுடன் கட்டையில் சிவராஜ் அடித்துவிட்டார். எனது மகனை அடித்து கீழே போட்டுவிட்டு ஆள் இறந்துவிடுவார் என்றும், கீழே போட்டுவிட்டு சென்றுவிட்டார். இரவு அங்கேயே இருந்துவிட்டு காலை 05.00 மணிக்கு பெரியகோட்டை ரோட்டிற்கு வந்து அதற்கு மேல் நடக்க முடியாமல் அங்கேயே விழுந்துவிட்டார். பக்கத்துதோட்டத்துகாரர் காலையில் தோட்டத்திற்கு சென்றுள்ளார். என்ன, ஏது என்று எனது மகனிடம் கேட்க அவனால் பேச முடியவில்லை. எனது மகன் செல்போனை பக்கத்துகாட்டுகாரரிடம் கொடுத்து எங்களுக்கு தகவல் சொல்லும்படி எனது மகன் சொல்லியுள்ளான். பக்கத்துதோட்டத்துகாரர் எனது வீட்டிற்கு அருகாமையில் உள்ள பக்கத்துதோட்டத்துகாரருக்கு தகவல் சொன்னதால் எனக்கு காலை 07.00 மணிக்கு செல்போனை கொண்டு எனது பக்கத்துதோட்டத்துகாரர் என்னிடம் கொடுத்தார். நான் எனது மகன் கீழே விழுந்துவிடந்த இடத்திற்கு அருகாமையில் இருந்து பக்கத்துதோட்டத்துகாரரிடம் பேசினேன். அப்போது பெரியகோட்டையை சார்ந்தவர் என்னிடம் சொன்னார். பிறகு நான் கிளம்பி சென்றேன். நான் சென்று 5 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. பிறகு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அன்றைய தினம் மாலை அவசர சிகிச்சை பிரிவிக்கு எனது மகனை மாற்றிவிட்டார்கள். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. புகாரை யார் எழுதினார்கள் என்றால் ? போலீசார் தான் எழுதினார்கள். அதில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. நடந்த சம்பவத்தை எழுதியுள்ளதாக பிறகு சொன்னார்கள். போலீசார் கேட்டதால் நான் கையொப்பம் போட்டேன். **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1**. போலீசார் என்னை விசரித்தார்களா என்றால் ? மருத்துவமனையில் இருந்து எனது மகன் டிஸ்சார்ஜ் ஆகி சென்ற பிறகு என்னை வரச் சொன்னார்கள். நான் சென்றேன். போலீசார் என்னிடம் விசாரித்து பிறகு கையொப்பம் வாங்கினார்கள். அவ்வளவு தான் எனக்கு தெரியும்.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

எனது மகனை சிவராஜ் என்பவர் கட்டையால் அடித்துவிட்டதாகவும், எனது மகன் பெரியகோட்டை பிரிவு அருகே காலை 05.00 மணிக்கு வந்து கீழே கிடந்தார் என்றும், நான் முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ள சாட்சியத்தை போலீசார் விசாரணையின் போது நான் சொல்லவில்லை என்றால் ? போலீசார் என்னை விசாரித்தார்கள். மற்றவை எனக்கு தெரியாது. சிவராஜ் என்பவர் எனது மகனை அழைத்த போது பன்றி கறி இருப்பதாகவும், தண்ணீ அடிக்க எனது மகனை சிவராஜ் அழைத்ததாகவும் நான் சொல்லியுள்ள சாட்சியத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் ? சரிதான். எனது மகனை நான் பார்த்த போது எனது மகனின் சட்டை, துணிமணிகளில் இரத்தம் இருந்ததா என்றால் ? இரத்தம் இருந்தது. இரத்தம் இருந்து சட்டை, துணிமணிகளை போலீசார் எடுத்துச் சென்றுவிட்டார்களா என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் காவல் நிலையம் வரச் சொல்லி எழுதிய பேப்பரில் கையொப்பம் வாங்கி கொண்டார்கள் என்றால் ? ஆமாம். நான் சொன்ன தேதியில் புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் எதுவும் போடவில்லை என்றால் ? சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. எனது மகன் டிஸ்சார்ஜ் ஆகி வந்த பிறகு போலீசார் வரச் சொன்னார்கள். அதனால் காவல் நிலையம் சென்றேன். எனது மகனை போலீசார் மருத்துவமனையில் விசாரித்த போது எனது மகனால் பேச முடியவில்லை என்றால் ? ஆமாம். பேசமுடியவில்லை. மருத்துவர், மருத்துவமனையில் என்னை எவ்வாறு எனது மகனுக்கு காயம் ஏற்பட்டது என்று என்னை விசாரித்தார் என்றால் ? இல்லை. மருத்துவர்கள் என்னை விசாரித்த போது எந்த தேதியில், என்ன நேரத்தில், எந்த இடத்தில் எனது மகனை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் ? நான் மருத்துவரிடம் எதுவும் சொல்லவில்லை. மருத்துவரிடம் நான் மேலே

கண்டவாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக வேண்டி தெரியாது என்று சொல்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.01 18:44:04 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரகாஷ் | தொழில் | : டிரைவர் வேலை |
| தகப்பனார் பெயர் | : ராமச்சந்திரன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : புதுக்கோட்டை | வயது | : சுமார் 38 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 01.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

கடந்த 16.11.2023ம் தேதி வியாழக்கிழமை மாலை 04.30 மணிக்கு சிவராஜ் என்பவர் எனக்கு போன் செய்து சத்திரப்பட்டிக்கு வரச்சொன்னார். நானும், எனது மனைவியும் சிவராஜ் வரச்சொன்னவுடன் சத்திரப்பட்டிக்கு சென்றோம். அங்கு ஆண்டவர் டீ கடையில் நானும் சிவராஜ் என்பவரும் டீ சாப்பிட்டோம். பிறகு எனது மனைவியை வீட்டிற்கு செல்லும்படி சொல்லி நான் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டேன். நானும், சிவராஜ் என்பவரும் டீ கடையில் அரைமணி நேரம் உட்கார்ந்து இருந்தோம். பிறகு சிவராஜ் என்பவர் என்னிடம் சரக்கு சாப்பிடலாமா என்று கேட்டார். என்னிடம் பணம் இல்லை என்று நான் சொன்னதால் நான் வாங்கி தருவதாக சிவராஜ் என்னிடம் சொன்னார். பிறகு சத்திரப்பட்டி கருங்குளம் என்ற இடத்திற்கு சென்றவுடன் என்னை சரக்கு சாப்பிட சொல்லியும், சிவராஜ் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். நான் மட்டும் அரை பாதி சரக்கை சாப்பிட்டேன். மறுபடியும் என்னை எனது வீட்டிற்கு அருகாமையில் என்னை இறக்கிவிட்டுவிட்டு சிவராஜ் சென்றுவிட்டார். மீண்டும் இரவு மணி சுமார் 09.00 அல்லது 09.15 மணி இருக்கும் அப்போது எனக்கு சிவராஜ் போன் செய்து பன்றி கறி இருப்பதாகவும், என்னை சாப்பிட

வரும்படியும் அழைத்தார். வீட்டில் நான் உன்னை அழைத்தாக யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று என்னிடம் சொன்னார். நான் எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு ரெட்டிபட்டி பிரிவில் என்னை நிக்க சொன்னதால் நான் ரெட்டிபட்டி பிரிவுக்கு சென்றுவிட்டேன். எனது செல்போனை சிவராஜ் வாங்கினார். கொஞ்ச தூரம் தனியாக சென்றுவிட்டார். யாருக்கு பேசினார் என்று தெரியவில்லை. எனது செல் சிவராஜ் என்பவரிடம் இருந்தது. சிவராஜ் இருசக்கர வாகனத்தை அங்கேயே இருக்கட்டும் என்றும், எனது வாகனத்தை எடுத்து ஒருபக்கம் போகலாம் என்று சிவராஜ் என்னிடம் சொன்னார். என்னை எனது வண்டியை ஓட்டும்படி சொன்னார். அவர் பின்பக்கத்தில் உட்கார்ந்து கொள்வதாக சொன்னார். இரவு மணி 10.00 இருக்கும். அப்போது மின்சாரம் ஆப் ஆகிவிட்டது. வண்டியை விட்டு இறங்க இறங்கவே என்னை அடித்துவிட்டார். அந்த நேரத்தில் மண்டையில் அடி விழுந்ததால் எங்கு நிக்கிறோம் என்று கூட எனக்கு தெரியவில்லை. அருகாமையில் மக்காச்சோளக்காடு இருந்தது. எப்படியாவது தப்பித்து செல்ல வேண்டும் என்று நான் மக்காச்சோளகாட்டிற்குள் சென்றேன். அப்போதும் என்னை அடித்துவிட்டார். உன்னை இன்று நான் கொல்லாமல் விடமாட்டேன் என்றும் உயிரோடு இருக்க கூடாது என்றும் செத்து தொலைந்துபோ என்றும் சொல்லி என்னை மூட்டை தூக்க கூடிய கம்பியால் எனது முகத்தில் குத்தி இழுத்துவிட்டார். நான் எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்று சொல்லி சோளக்காட்டிற்குள் சென்று மறைந்து உட்கார்ந்து இருந்தேன். எனது வேஷ்டியால் எனது முகத்தை இழுத்து கட்டிக்கொண்டு அன்று மழை பெய்தது. அந்த வேளையில் நான் சோளக்காட்டிற்குள் உட்கார்ந்து கொண்டு இருந்தேன். மணி காலை 05.00 அல்லது 05.30 மணி இருக்கும். அப்போது எனது வசம் செல்போன் இல்லாததால் பக்கத்து தோட்டத்துகாரரிடம் செல்லை வாங்கி எனது பக்கத்துதோட்டத்தை சேர்ந்த பாண்டி என்பவரது எண்ணிற்கு போன் செய்தேன். என்னால் அப்போது பேசமுடியவில்லை. எனது பெயரை மண்ணில் பிரகாஷ்

என்று எழுதி அந்த இடத்தில் உள்ள நபரிடம் காட்டினேன். பக்கத்துதோட்டத்துகாரர் எனது பக்கத்துதோட்டத்துகாரருக்கு போன் செய்தார். பிறகு நான் மயக்கம் அடைந்துவிட்டேன். 108 ஆம்புலன்ஸ் வந்தது கூட எனக்கு தெரியவில்லை. எனக்கு முகத்தில் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்ட பிறகு தான் திண்டுக்கல் அரசு மருத்துவனையில் உள்ள விபரம் தெரிய வந்தது. அப்போதும் என்னால் பேச முடியவில்லை. அப்போது சத்திரப்பட்டி காவல் ஆய்வாளர் என்னிடம் பேச முடியாவிட்டாலும் பராவாயில்லை. யார் உன்னை அடித்தார்கள் என்று பேப்பரில் எழுதிக்காட்டும்படி சொன்னார். நான் பேப்பரில் சிவராஜ் தான் அடித்தார் என்று எழுதிக் காட்டினேன். பிறகு போலீசார் அன்றைய தினம் சென்றுவிட்டார்கள். பிறகு ஒரு மாதம் கழித்து பேசமுடியுமா என்று காவல் ஆய்வாளர் வந்து என்னை விசாரித்தார். என்னால் அப்போதும் சரியாக பேச முடியவில்லை. மீண்டும் நான் பேப்பரில் நடந்ததை தேதி வாரியாக எழுதிக் கொடுத்தேன். 45 நாட்களுக்கு பிறகு டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்கு வந்தவுடன் என்னை சத்திரப்பட்டி போலீசார் காவல் நிலையம் வரும் படி சொன்னார். மீண்டும் என்னிடமும், எனது தகப்பனாரிடமும் எழுதி கையொப்பம் வாங்கினார்கள். அது மட்டும் தான் தெரியும். என்னை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். மருத்துவமனைக்கு நான் ஒவ்வொரு வாரமும் பரிசோதனைக்கு வரச் சொன்னதால் 6 மாதகாலமாக சென்றுவந்தேன். மற்றும் இன்றும் ஒரு அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். அவ்வளவு தான். என்னை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்று எனக்கு கொடுங்காயம் ஏற்படுத்திய சிவராஜ் என்பவர் நீதிமன்றத்திற்கு வருகை புரிந்துள்ளாரா என்றால் ? ஆமாம். இன்று வருகைபுரிந்துள்ளார். குற்றம்சாட்டப்பட்டவர் என்ற இடத்தில் இருந்தவரை சாட்சி அடையாம் காட்டினார். என்னிடம் காட்டப்படும் செல்போன் என்னுடையது தான். LAVA கருப்பு நிற பட்டன் செல் சான்று பொருள் 1. நானும், குற்றம்சாட்டப்பட்டவரும் சென்ற இருசக்கர வாகனம் TN 57 AZ 9316 என்ற எண்ணுள்ள புளூ கலர்

பேசன்புரோ இருசக்கர வாகனம் என்னுடையதுதான். அந்த இருசக்கர வாகனம் சா.பொ.2. எதிரியின் இருசக்கர வாகனம் சுசுக்கி வாகனம் ஆகும். அந்த வாகனம் சா.பொ.3. என்னிடம் காட்டப்படும் வெள்ளை டிசைன் போட்ட கருப்பு நிற முழுக்கை சட்டை சா.பொ.4. வெள்ளை கருப்பு கட்டம்போட்ட புளூ கலர் லுங்கி சா.பொ.5. என்னை எதிரியானவர் முதலில் தடியால் அடித்தார். அந்த தடியானது என்னிடம் காட்டப்படும் தடி ஆகும். என்னிடம் காட்டப்படும் தடியானது சவுக்கு தடி ஆகும். அந்த சவுக்கு தடி சா.பொ.6. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

சத்திரப்பட்டியில் உள்ள ஆண்டவர் டீ கடையில் நானும், எதிரியும் அரை மணி நேரம் பேசிக் கொண்டு இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையின் போது நான் சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. சரக்கு சாப்பிட என்னை சிவராஜ் அழைத்த போது என்னிடம் பணம் இல்லை என்றும், நான் சிவராஜிடம் சொன்னதாகவும் அவர் நான் வாங்கி தருகிறேன் என்று கூறியதாகவும் சொல்லியுள்ள விபரத்தை நான் போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் ? சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் மட்டும் அரை பாதி சரக்கை சாப்பிட்டதாகவும், நான் சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையின் போது நான் சொல்லவில்லை என்றால் ? சரியல்ல, சொல்லியுள்ளேன். ரெட்டியபட்டி பிரிவிற்கு வரச் சொல்லி சொன்னதாகவும், நான் வரும் வரை சிவராஜ் அங்கு காத்து இருந்ததாகவும், நான் சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் ? சரியல்ல, சொல்லியுள்ளேன். எனது செல்போனை சிவராஜ் அவரிடம் வாங்கி வைத்துக் கொண்டதாக நான் சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரிக்கும் போது சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம், சொல்லியுள்ளேன். சிவராஜ் என்பவர் அவருடைய வாகனத்தை நிறுத்தி விட்டு என்னுடைய வாகனத்தை ஓட்டும்படி நான் சொல்லியுள்ள சங்கதியை நான் போலீசார்

விசாராணையின் போது சொல்லவில்லை என்றால் ? சரியல்ல, சொல்லியுள்ளேன். மின்சாரம் ஆப் ஆகிவிட்டது என்றும், நான் எனது வண்டியை விட்டு இறங்கும்போது என் மண்டையில் சிவராஜ் அடித்துவிட்டார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையின் போது சொன்னேனா என்றால் ? சொன்னேன். எப்படியாவது தப்பித்து ஓட வேண்டும் என்று மக்காச்சோளகாட்டிற்குள் ஓடியதாக சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம், சொல்லியுள்ளேன். மக்காச்சோள காட்டிற்குள்ளும் என்னை வந்து அடித்தாக சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையின் போது நான் சொல்லவில்லை என்றால் ? சரியல்ல, சொல்லியுள்ளேன். மூட்டை தூக்கும் கொக்கியால் எனது முகத்தின் வலது பக்கதாடையை குத்தி இழுத்துவிட்டதாக நான் சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்று சோளக்காட்டிற்கு சென்று இருந்த போது எனது வேட்டியால் எனது தாடை தொங்கியதை நான் கட்டியதாக சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் ? சரியல்ல, சொல்லியுள்ளேேன். அந்த நேரத்தில் மழை பெய்திருந்தபோது இரவு முழுவதும் உட்கார்ந்து இருந்ததாக நான் சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் ? சரியல்ல, சொல்லியுள்ளேன். மண்ணில் பிரகாஷ் என்ற பெயரை எழுதிக் காட்டியதாக நான் சொல்லியுள்ள விபரத்தை நான் போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் ? சரியல்ல, சொல்லியுள்ளேன். பக்கத்துதோட்டத்துகாரர் எப்படி காயம் ஏற்பட்டது என்று என்னை கேட்டாரா என்றால் ? கேட்டார், என்னால் பேச முடியவில்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் ? 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சேர்ந்து எத்தனை நாட்கள் கழித்து எனக்கு நினைவு வந்தது என்றால் ? மறுநாள் மாலை நினைவு வந்தது. அதற்கு பிறகு

நான் நடந்த விபரத்தை பேப்பரில் எழுதிக் காட்டினேன். எங்கள் வீட்டிற்கும், சத்திரப்பட்டிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ? சுமார் 10 அல்லது 15 கி.மீ தூரம் இருக்கும். பஸ் போக்குவரத்து உள்ளதா என்றால் ? டவுன் பஸ் போக்குவரத்து உண்டு. 16.11.2023ம் தேதி நானும், எனது மனைவியும் சத்திரப்பட்டி வந்தோம் என்றால் ? ஆமாம். எனது மனைவி ஊருக்கு சென்ற போது எனக்கு செலவுக்காக பணம் ரூ.100 கொடுத்துவிட்டு சென்றார் என்றால் ? சரிதான். எத்தனை மணிக்கு நான் ஊருக்கு சென்றேன் என்றால் ? சிவராஜ் என்னை அன்றைய தினம் மணி சுமார் 08.00 மணி அளவில் எனது வீட்டிற்கு அருகாமையில் வந்து இறக்கிவிட்டு சென்றுவிட்டார். என்னை இறக்கிவிட்ட விபரம் பக்கத்துவீட்டுகாரருக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. அன்றைய தினம் அதற்கு பிறகு நான் அரை பாட்டில் பிராந்தி சாப்பிட்டேன் என்றால் ? சரிதான். மீண்டும் எதிரி என்னை அழைத்தன் பேரில் ரெட்டியபட்டிக்கு சென்றேன் என்றால் ? ஆமாம். இரவு 09.15 மணிக்கு சென்றேன். நான் செல்லும்போது குடிபோதையுடன் தான் வண்டி ஓட்டிச் சென்றேன் என்றால் ? ஆமாம். குடிபோதையுடன் நான் வண்டி ஓட்டிச் சென்ற போது ரோட்டில் மழை ஈரம் இருந்ததால் கீழே விழுந்ததால் வண்டி இழுத்து எனது முகத்தில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றால் ? சரியல்ல. நான் போலீசாரிடம் எழுதிக் கொடுத்ததில் என்ன இருந்தது என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் ? ஆமாம். நான் சொன்ன விபரத்தை தான் எனது தகப்பனாரும் போலீசாரிடம் சொன்னார் என்றால் ? ஆமாம். நானும், எனது தகப்பனாரும் ஒருவருக்கொருவர் மாறி சம்பவத்தை பற்றி சொல்லவில்லை என்றால் ? சரிதான். சத்திரப்பட்டியில் இருந்து தேவத்தூர் செல்லக்கூடியரோடு தென்வடல் ரோடு என்றால் ? சரிதான். கிழக்கு பக்கம் ரெட்டிபட்டி, பெரியகோட்டை ஊர் உள்ளது என்றால் ? பிரிவு உள்ளது. மேற்படி பிரிவில் இருந்து கிழக்கே சென்றால் ரெட்டிபட்டி செல்லமுடியும் என்றால் ? இரண்டு பிரிவுகள் உள்ளது. முதல் பிரிவில் கிழக்கே சென்றால் ரெட்டிபட்டி செல்லலாம். இரண்டாவது பிரிவில் கிழக்கே சென்றால்

பெரியகோட்டை செல்லலாம். நான் படுத்து இருந்த இடத்திற்கு இரண்டு சாலை வீடுகள் உள்ளது என்றால் ? நான் படுத்து இருந்த இடத்திற்கு ரோட்டிற்கு கிழுபுறம் சிமெண்ட் அட்டை போட்ட வீடு இருந்தது. அந்த வீட்டை சார்ந்தவர்கள் யாராவது இருந்தார்களா என்றால் ? இல்லை. முதன்முதலாக என்னிடம் அந்த இடத்தில் எனது பெயரை கேட்ட நபர் எனக்கு தெரியாது என்றால் ? ஆமாம். நான் அவரை அதற்கு முன்பு பார்த்து இல்லை. நான் சொல்வதை போல் எந்த சம்பமும் நடைபெறவில்லை என்றால் ? சரியல்ல. போலீசாரும் எனது தகப்பனாரும் சொல்லிக் கொடுத்தன் பேரில் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. எனது தகப்பனார் ஆஜர் எதிரியிடம் ஒரு 5, 6 ஆண்டுகாலமாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் ? சரிதான். எனது தகப்பனாரின் பேச்சை கேட்டு ஆஜர் எதிரியிடம் பேசுவதில்லை என்றால் ? சரிதான். நானும், எனது தகப்பனாரும் சம்பவத்திற்கு முன்பு 5, 6 ஆண்டுகாலமாக எதிரியுடன் எந்தவித பேச்சுவார்த்தையும் இல்லை என்றால் ? எந்தவித போக்குவரத்தும், பேச்சுவார்த்தையும் இல்லை. எதிரி என்னை தடி மற்றும் மூட்டை தூக்கும் கொக்கியால் என்னை தாக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் மோட்டார் சைக்கிளில் குடி போதையில் சென்ற போது கீழே விழுந்துவிட்டேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.01 18:44:15 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.3**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாண்டியம்மாள் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பொன்ராஜ் | கணவர் பெயர் | : ராமசந்திரன் |
| கிராமம் | : புதுகோட்டை | வயது | : சுமார் 55 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 01.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

எனக்கு பக்கத்துதோட்டத்துகாரரான பாண்டி என்பவர் எனக்கு போன் செய்தார். அப்போது நானும், எனது கணவரும் ரெட்டியார்பட்டி பிரிவுக்கு சென்று எனது மகனை பார்த்தோம். அங்கு 108 ஆம்புலன்ஸ் வந்தது. எனது மகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை இல்லை.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.01 18:44:20 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.4**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காளியம்மாள் | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : பஞ்சலிங்கம் | கணவர் பெயர் | : ஈஸ்வரன் |
| கிராமம் | : புதுக்கோட்டை | வயது | : சுமார் 45 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 01.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

நான் சம்பவ தினத்தன்று நான் ஊருக்கு சென்றுவிட்டேன். அன்று மாலை தான் எனக்கு தகவல் தெரியும். இருசக்கர வாகனத்தில் சென்று பிரகாஷ் என்பவர் கீழே விழுந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அன்று மாலை தான் எனக்கு தெரியும். நான் மருத்துவமனைக்கு சென்று பிரகாஷ் என்பவரை பார்த்தேன். என்னை போலீசார் விசாரித்தார்கள். எனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்று கேட்டார்கள். மற்றவை எனக்கு தெரியாது.

( சாட்சியானவர் கடந்த 18.11.2023ம் தேதி புலன் விசாரணை அதிகாரிடம் அளித்த வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. )

அரசு தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். ஆஜர் எதிரி எனக்கு என்ன உறவு என்றால் ? எனக்கு மருமகன் ஆகிறது. எனது மகள் வித்யாவை ஆஜர் எதிரி திருமணம் செய்துள்ளார். பாண்டி என்பவர் எனக்கு யார்

என்று தெரியாது. கடந்த 17.11.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு எங்கள் ஊரை சார்ந்த பாண்டி என்பவர் என் சம்மந்தி ராமசந்திரனுக்கு போன் போட்டு எனது மருமகன் பிரகாஷ் என்பவர் பெரியகோட்டை பிரிவு அருகே முகத்தில் காயத்துடன் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் எனது மகளிடம் பிரகாஷ் என்பவர் எங்கே என்று நான் கேட்டதாகவும், அதற்கு 16.11.2023ம் தேதி இரவு 09.45 மணிக்கு எங்கள் ஊரை சார்ந்த ஈஸ்வரனை வேலை விஷயமாக பார்த்து வருவதாக சொல்லிவிட்டு இரவு நேரம் ஆகி வராததால் ஈஸ்வரன் என்பவரை வேலை விஷயமாக பார்த்துவிட்டு வருவதாக சொல்லிவிட்டு வண்டியை எடுத்துகொண்டு சென்றவர் இரவு நேரம் ஆகியும் வராதால் சுமார் 11.00 மணியளவில் போன் செய்ததாகவும் அப்போது பிரகாஷ் என்பவர் பணம் வாங்க வந்த இடத்தில் நேரம் ஆகிவிட்டதாகவும் செல்போன் சுவிட்ச் ஆப் ஆகிவிட்டது என்று வந்ததாகவும், நானும், எனது உறவினர்களும் பெரியகோட்டை பிரிவு அருகே சென்று பார்த்த போது எனது மருமகன் பிரகாஷ் முகத்தில் தாடை உடைந்து பலத்த காயத்துடன் கிடந்தார் என்றும், ஆம்புலன்ஸ் வழியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பிறகு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாகவும் சிவராஜ் என்பவர் எனது மருமகன் பிரகாஷ் என்பவரை முகத்தில் அடித்து இடது பக்க தாடை பகுதியில் இரத்தகாயம் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்ததாக புலன் விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலம் அளித்துவிட்டு வழக்கிற்காக வேண்டியும், காயம்பட்ட பிரகாஷ் என்பவர் எனது இளைய மகளின் கணவர் என்பதாலும், ஆஜர் எதிரி மூத்த மகளின் கணவர் என்பதாலும் வழக்கிற்காக வேண்டியும் இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை இல்லை.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.01 18:44:27 +0530

**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**S.C.No.124/2025**

**வழக்கு சாட்சி P.W.5**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரன் | தொழில் | : கட்டுமான தொழில் |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : புதுக்கோட்டை | வயது | : சுமார் 47 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 01.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

இந்த வழக்கை பற்றி எனக்கு என்ன தெரியும் என்றால் ? இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. நான் அன்றைய தினம் வெளியூர் வேலைக்கு சென்றுவிட்டேன். எனது மருமகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விபரம் மட்டுமே தெரியும். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

( சாட்சியானவர் கடந்த 18.11.2023ம் தேதி புலன் விசாரணை அதிகாரிடம் அளித்த வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. )

அரசு தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். ஆஜர் எதிரி எனக்கு என்ன உறவு என்றால் ? எனக்கு மருமகன் ஆகிறது. எனது மகள் வித்யாவை ஆஜர் எதிரி திருமணம் செய்துள்ளார். பாண்டி என்பவர் எனக்கு யார் என்று தெரியாது. கடந்த 17.11.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு எங்கள் ஊரை சார்ந்த பாண்டி என்பவர் என் சம்மந்தி ராமசந்திரனுக்கு போன் போட்டு

எனது மருமகன் பிரகாஷ் என்பவர் பெரியகோட்டை பிரிவு அருகே முகத்தில் காயத்துடன் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் எனது மகளிடம் பிரகாஷ் என்பவர் எங்கே என்று நான் கேட்டதாகவும், அதற்கு 16.11.2023ம் தேதி இரவு 09.45 மணிக்கு எங்கள் ஊரை சார்ந்த ஈஸ்வரனை வேலை விஷயமாக பார்த்து வருவதாக சொல்லிவிட்டு இரவு நேரம் ஆகி வராததால் ஈஸ்வரன் என்பவரை வேலை விஷயமாக பார்த்துவிட்டு வருவதாக சொல்லிவிட்டு வண்டியை எடுத்துகொண்டு சென்றவர் இரவு நேரம் ஆகியும் வராதால் சுமார் 11.00 மணியளவில் போன் செய்ததாகவும் அப்போது பிரகாஷ் என்பவர் பணம் வாங்க வந்த இடத்தில் நேரம் ஆகிவிட்டதாகவும் செல்போன் சுவிட்ச் ஆப் ஆகிவிட்டது என்று வந்ததாகவும், நானும், எனது உறவினர்களும் பெரியகோட்டை பிரிவு அருகே சென்று பார்த்த போது எனது மருமகன் பிரகாஷ் முகத்தில் தாடை உடைந்து பலத்த காயத்துடன் கிடந்தார் என்றும், ஆம்புலன்ஸ் வழியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பிறகு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாகவும் சிவராஜ் என்பவர் எனது மருமகன் பிரகாஷ் என்பவரை முகத்தில் அடித்து இடது பக்க தாடை பகுதியில் இரத்தகாயம் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்ததாக புலன் விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலம் அளித்துவிட்டு வழக்கிற்காக வேண்டியும், காயம்பட்ட பிரகாஷ் என்பவர் எனது இளைய மகளின் கணவர் என்பதாலும், ஆஜர் எதிரி மூத்த மகளின் கணவர் என்பதாலும் வழக்கிற்காக வேண்டியும் இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை இல்லை.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.01 18:44:33 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.6**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பெருமாள்கவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பெரியகோட்டை | வயது | : சுமார் 67 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 01.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

நான் எனது தோட்டத்தில் இருந்து எனது மற்றொரு தோட்டத்திற்கு சென்றேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் நான் எனது தோட்டத்தில் இருந்து மற்றொரு தோட்டத்திற்கு சென்ற போது இன்று நீதிமன்றத்திற்கு வந்து தற்போது வெளியே உள்ள நபர் எனது தோட்டத்திற்கு செல்லக்கூடிய கேட்டிற்கு முன்பு படுத்து இருந்தார். என்னை பார்த்தவுடன் எழுந்துகொண்டார். பேச முடியவில்லை. எனது செல்போனை கேட்டார். நான் செல்போனை கொடுத்தேன். அவர் போன் செய்து கொடுத்தார். நான் தகவல் கொடுத்தேன். ஒரு அரை மணி நேரத்தில் அவருடைய அப்பா, அம்மா, உறவினர்கள் அங்கு வந்துவிட்டார்கள். அவரால் பேச முடியவில்லை. என்னிடம் எதுவும் அவர் சொல்ல முடியவில்லை. அவ்வளவு தான் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:

குறுக்கு விசாரணை இல்லை.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.01 18:44:40 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.7**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பெரியகோட்டை | வயது | : சுமார் 39 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 01.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

ராமராஜ் என்பவரின் தோட்டத்திற்கு செல்லும் வழியில் கூட்டமாக இருந்தது. நான் அங்கு சென்று பார்த்த போது நீதிமன்றத்திற்கு வெளியே உள்ள பிரகாஷ் என்பவர் அடிபட்டு கிடந்தார். ராமராஜ் என்பவர் உறவினரிடம் சொல்லிவிட்டதாக சொன்னார். ஆம்புலன்ஸ் வந்தவுடன் அடிபட்ட நபரை ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டு நான் சென்றுவிட்டேன். இது மட்டுமே எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை இல்லை.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.01 18:44:49 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்